**STARTING TIME 11.09 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 146/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 09.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பாலு Father's Name : நரசிம்ம ஆச்சாரி

Address : எண்.87, காளியாத்தம்மன் கோயில் தெரு,
தக்கோலம் கிராமம், அரக்கோணம் வட்டம்.

Age : 60

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 7 முதல் 12 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

18. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், பாகப் பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். குன்னத்தூர் கிராமத்தில் எனக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால், உள்ளது. அந்த சொத்துக்கள் எனது தாத்தா கந்தப்ப ஆச்சாரி சம்பாதித்த சொத்துக்களா என்றால், இல்லை, எனது தகப்பனார் சம்பாதித்த சொத்துக்கள் ஆகும்.

19. குன்னத்தூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டதா இல்லையா என்றும், இவ்வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. குன்னத்தூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களை இவ்வழக்கின் சொத்து விவரத்தில் சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

20. கோவிந்தராஜ் ஆச்சாரி, சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்கள் குன்னத்தூர் கிராமத்தில் இருந்த சொத்துக்களில் அவர்களுக்குண்டான பாகத்தை வரதப்பா ஆச்சாரி வாரிசுகளுக்கு விடுதலை பத்திர ஆவண எண் 4970/1979 என்ற எண்ணில் விடுதலை செய்துக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

21. வரதப்பா ஆச்சாரியின் மனைவி சாரதம்மாள், மகள் ராணியம்மாள் ஆகியோர்கள் அவர்களுக்குண்டான பாகத்தை பொறுத்து கோவிந்தராஜ் ஆச்சாரி, சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்க்கு விடுதலை பத்திர எண் 5017/1979 என்ற எண்ணில் விடுதலை செய்துக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

22. வரதப்பா ஆச்சாரியின் மனைவி சாரதம்மாள், மகள் ராணியம்மாள் மற்றும் பேத்தி பரிமளா ஆகியோருக்கு இவ்வழக்கு சொத்தில் பாகம் இல்லை என்றால், சரியல்ல, பாகம் உள்ளது. தாவா சொத்தை பொறுத்தும், மற்ற சொத்தை பொறுத்தும் ஏற்கனவே பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது என்றும், அதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

23. தாவா சொத்து கோவிந்தராஜ் ஆச்சாரிக்கு விடுதலை பத்திர எண் 5017/1979 என்ற ஆவணம் மற்றும் கூரை சீட்டு மூலம் பாத்தியப்பட்டது என்றும், எனவே, அந்த சொத்தை பொறுத்து நான் பாகம் கேட்க இயலாது என்றால், சரியல்ல. அந்த கூரை சீட்டு என் வசம் தான் உள்ளது என்றால், சரியல்ல. எனவே, இவ்வழக்கை சொத்தில் நான் பாகம் கேட்க உரிமையே இல்லை என்பதால், தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

7 முதல் 12 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME: 11.23. A.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.09 17:17:34 +0530